Volume 1 Issue 2 February 2020 E-ISSN: 2582-2063

# பண்டைக்கால நாணயமும் பண்பாடும் ஓர் பார்வை

**பா. ஜெயா**
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை*
*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி, இந்தியா*

உலக வரலாற்றில் பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை நாணயங்கள் முதன்மை இடத்தில் உள்ளது. நமது நாகரீக வளர்ச்சி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றுடன் பின்னி பிணைந்து காணப்படுகிறது. மனித வாழ்கையில் ,ருந்து நாணயத்தை பிரித்து எடுக்க இயலாது. ஒரு நாட்டின் பொருளாதார நிலையையும் அரசியல் தொடர்புகளையும் நாணயங்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகிறது. நாணயங்கள் குறித்து அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்வதை நாணயவியல் என்று ஆய்வாளர்கள் கூறுவர். ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்துக் கொள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள் எவ்வளவு முக்கியமோ அதுபோன்று நாணயங்களும் முக்கிய பங்கு வகுக்கின்றன. தமிழகத்தின் பல பகுதிகளில் அகழ்வு ஆய்வு நடத்தியதில் கிடைத்த பல காலகட்ட நாணயங்கள் குறித்து ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சங்க கால நாணயங்கள்

சங்க காலத்தில் ஆட்சிச் செய்த அரசர்கள் பலவகையான நாணயங்களை வெளியிட்டனர். சங்ககால பாண்டியரின் செப்பு நாணயங்கள் பல நமக்குக் கிடைத்துள்ளன. அவை குதிரை, தொட்டி, ஆமை சின்னங்கள் உள்ளவை, பெருவழுதி காலத்திய வெள்ளி நாணயங்கள் போன்ற பல நாணயங்கள் கிடைத்துள்ளன. நாணயத்தின் ஒரு புறம் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதால் இது பாண்டியர் கால நாணயங்கள் என அறியலாம். தமிழ்நாட்டிலும், கேரள மாநிலத்திலும் ஏராளமான ரோமாபுரி நாணயங்களும், கிரேக்க நாணயங்களும் கிடைத்துள்ளன. இதனால் சங்க காலத் தமிழரின் பண்பாட்டு வணிக உறவுகள் நன்கு அறியப்படுகின்றன. கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலுக்கிட்வம்ச பெருமன்னர் இரண்டாம் சிலுக்கிட் வெளியிட்ட நாணயங்களும், அதே நூற்றாண்டைச் சேர்ந்த பினிசீய நாட்டு நாணயங்களும் கரூரில் கிடைத்துள்ளன. ,தனால் சேரர்கள் மத்தியத் தரைக்கடல் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழ்நாட்டிலுள்ள கரூரே சங்கச் சேரர் தலைநகரம் என்பதனையும், அது மிகச்சிறந்த வாணிகத் தளமாக விளங்கியது என்பதனையும் அறிந்து கொள்ள அங்கு கிடைத்துள்ள பெரும்பாலான நாணயங்களே சான்றாக அமைகின்றன. கொல்லிப்பொறை, கொல் இரும்புறையன், மாக்கோதை, புலி பொறிக்கப்பட்ட சோழர் காசுகள் ஆகிய யாவும் கரூர் அமராவதி ஆற்றுப்படுகையிலேயே கிடைத்துள்ளன.

### அசோகர் காலத்திய நாணயங்கள்

மாமன்னர் அசோகர் காலத்திய காசுகளில் வேலியிட்ட புனித மரம் ஒருபுறமும், நாணயப் பரிசோதகரின் முத்திரை மறுபுறமும் காணப்படுகின்றன. அசோகரால் வெளியிடப்பட்ட சில நாணயங்களில் மூன்று வளைவு முகடும் அதன் மீது கோல மயிலும் உள்ளது. தமிழ்நாட்டில் வீரசிகாமணி (நெல்லை மாவட்டம்) தாராபுரம், வெம்பாவூர் (திருச்சி மாவட்டம்) கவுனியண்குட்டை (சேலம் மாவட்டம்) தொண்டமானத்தம் (தெ.ஆ.மாவட்டம்) மாம்பலம் ஆகிய ஊர்களில் மௌரியரின் முத்திரை நாணயப் புதையல்கள் (வுசநயளரசந வுசழளநள) கிடைத்துள்ளன.

### பாண்டியர் கால நாணயங்கள்

பாண்டியர்கள் காலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களால் நாணயங்கள் வெளியிடப்பட்டன. பாண்ய நாட்டில் கத்யான, திரமம், பழங்காசு, பொன் காணம்,

கழஞ்சு, மாடை என்னும் பெயருடைய நாணயங்கள் புழக்கத்தில் ,ருந்தன. தொடக்க காலத்தில் இவர்கள் முத்திரையிட்ட வெள்ளி நாணயங்களையும், ஒரே அச்சில் அடித்த செப்பு நாணயங்களையும் வெளியிட்டனர். பாண்டிய மன்னர்கள் பல விருதுகள் பெயரில் நாணயங்களை வெளியிட்டனர். அவைகள் பழமுதல் ஆணை அச்சு, புதுக்குளிகைப்பணம், தனபாலன் குளிகை, பழம் சோழிய காசு ஆகிய நாணயங்கள் பாண்டிய நாட்டில் புழக்கத்தில் இருந்தன். சடையவர்மன் சுந்தரபாண்டியன் பல மாநிலங்களை வென்றதனால் 'பல்லாந்தலையானான்" என்ற தனது விருதுப் பெயர் விளங்க நாணயங்களை வெளியிட்டு, அவற்றில் 'எல்லாந்தலையானான்" எனப் பொறித்தான். இவ்வேந்தன் 'கச்சி வழங்கும் பெருமாள்", 'கலியுகராமன்" என்னும் பெயர் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டான். முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோணாடு கொண்டான் என்னும் நாணயத்தைத் தனது சோழநாட்டு வெற்றியின் சின்னமாக வெளியிட்டான். முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 'சுந்தர" 'சுந்தர பாண்டிய", 'சு" என்னும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட செப்பு நாணயங்களை வெளியிட்டான். சுந்தர எனும் பெயர் பொறித்த நாணயங்கள் கரூரிலும் கிடைத்துள்ளன. அவனி வேந்தராமன், அவனிய சேகரன், அவனிவென்றான், வீரபாண்டியன், கோதண்ட ராமன், குலசேகரன் எனும் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களும் வெளியிடப்பட்டன.

**சேரர்கள் கால நாணயங்கள்**

கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டின் இறுதி வரை ,ந்தியாவின் பல பகுதிகளில் எழுத்துப் பொறிப்பு இல்லாத சிறு சிறு முத்திரை உருவங்களோடு கூடிய காசுகள் பல வடிவங்களில் வெளியிடப்பட்டன. சேரரும் வட இந்திய வேந்தர்கள் வெளியிட்ட வெள்ளி முத்திரைக் காசுகளைப் போன்று, ஐந்து முத்திரைகளைக் கொண்ட வெள்ளி முத்திரைக் காசுகளை வெளியிட்டனர். கரூர் அமராவதி ஆற்றுப்படுகையில், ஐந்து சின்னங்களைக் கொண்ட வெள்ளி முத்திரைக் காசுகள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் முன்புறம் அறுவளைவு முகடு, சூரியன், சந்திரன், ஸ்தூபம், தொட்டிக்குள் மீன் ஆகிய ஐந்து சின்னங்கள் உள்ளன. பின்புறம் சேரரின் அரச முத்திரையான வில்லும் அம்பும் பொறிக்கப்பட்டுள்ளன. சேரர்கள் ஏராளமான செப்புக்காசுகளை வெளியிட்டுள்ளனர். செவ்வக, சதுர வடிவிலான இவற்றின் வலதுபுறம் தமிழி எழுத்துக்களும், மறுபுறம் சேரரின் வில், அம்பு, அங்குசம் ஆகியவையும் பொறிக்கப்பட்டுள்ளன. கரூரில் கண்டெடுக்கப்பட்ட காசுகள் அனைத்திலும் யானைக்கு மேல், மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குதிரை பொறிக்கப்பட்ட சங்ககாலச் சேரர் காசுகளும் கரூரில் கிடைத்துள்ளன. ,தன் ஒரு புறத்தில் குதிரையும், குதிரையின் முன் சூலமும் உள்ளன. சூலத்தின் கீழ் பரசு, கட்டாரி உள்ளன. குதிரையின் மேல் காளை உருவம் காணப்படுகின்றது. பின்புறம் சேரர்க்கே உரிய வில், அம்பு, அங்குசம் ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன. மாக்கோதைக் காசுகள், இரும்பொறைக்காசுகள், கொல்லிப்பொறை காசு போன்ற காசுகள் வழக்கத்தில் இருந்ததாக வரலாறு வாயிலாக அறியலாம்.

**பல்லவர் கால நாணயங்கள்**

தமிழகத்தை ஆண்டுவந்த புகழ்மிகு அரச மரபினருள் பல்லவரும் ஒருவராவர். தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்த ,வர்களது தலைநகர் காஞ்சி ஆகும். மாமல்லபுரம் இவர்களது துறைமுகப்பட்டிணமாகத் திகழ்ந்தது. ,வர்கள் பலவகையான கலைநயம் மிக்க காசுகளையும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் அதிக அளவில் செப்புக் காசுகளையும் சில தங்க, வெள்ளிக் காசுகளையும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் சில ஈயக்காசுகளையும் வெளியிட்டுள்ளனர். இவற்றுள் காஞ்சிபுரத்தில் கிடைத்துள்ள 19 கிராம் எடையுள்ள ஈயக்காசே மிகவும் கனமானது. பல்லவ நாட்டில் பொன், கானம், பணம், கழஞ்சு, மஞ்சாடி, துளைப்பொன், துளை நிறைப்பொன், விடேல்விடுகு பொன் முதலான நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததன கல்வெட்டுக்காளல் அறிகிறோம். பல்லவ வேந்தருள் முதல் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்

முதல் பரமேஸ்வரன், இரண்டாம் நந்திவர்மன் ஆகியோர் தமது பெயரிலும் விருதுப் பெயரிலும் காசுகளை வெளியிட்டுள்ளனர். ‘சித்ர” கலப்பு உலோக நாணயம்: முதல் மகேந்திரப் பல்லவனது விருதுப்பெயர்களும் ‘சித்ர காரப்புலி” என்பது புகழ்மிக்கது. பல்லவர் காசுகளில் லிங்கம், சங்கு, போதிமரம், குத்துவாள், கொடியுடன் கூடிய கொடிமரம், பாம்பு, சைத்தியம், தாமரை, கும்பம், முக்குடை, சுவஸ்திகா, ஸ்ரீ வத்சம், சூரியன், சக்கரம், படகு, பாய்மரக்கப்பல், இரட்டை மீன், பிறை போன்ற முப்பதிற்கும் மேற்பட்ட சின்னங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு காசிலும் ஒரு சில சின்னங்கள் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளன. ,தனால் பல்லவர்கள் சமயப்பொறை மிக்கவர்கள் என்பது புலனாகின்றது. முதல் மகேந்திரவர்ம பல்லவனின் காசுகள், கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ளன. ஸ்ரீ வம்பு என்று பல்லவ கிரந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ள காசின் பின்புறம் மூவேந்தரின் அரச சின்னங்களான புலி, வில், மீன் (கயல்) பொறிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீவ, எதி, வுகா, பகாபிடுகு, பகாபிடு, பகா ஆகிய விருதுப்பெயர்கள் பொறிக்கப்பட்ட காசுகளையும் முதல் மகேந்திர பல்லவனே வெளியிட்டுள்ளான். வடஆற்காடு மாவட்டம் பொண்ணை ஆற்றங்கரையில் ‘கடும் பிடுகு” எனும் விருதுப் பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளிக்காசு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல்லவர் நாணய வரலாற்றில் இக்காசு தனித்தன்மை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**சோழர் கால நாணயங்கள்**

சோழர் காலத்தில் அதிகமான செப்பு நாணயங்களே வெளியிட்டனர். பூம்புகார் அகழாய்வில் இந்தியத் தொல்லியல் துறையினர் சங்கச் சோழரின் சதுர விடிவிலான செப்புக்காசு ஒன்றைக் கண்டெடுத்தனர். ,வர்களது செப்பு நாணயம் ஒன்றின் முன்புறம் குடை, யானை, குதிரை ஆகிய சின்னங்களும், பின்புறம் புலியின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. முட்டை வடிவிலான செப்பு நாணயம் ஒன்றும் நமக்குக் கிடைத்துள்ளது. இதில் முன்புறம் யானையும் அதன் அருகில் குதிரையும் உள்ளன. நாணயத்தின் பின்புறம் புலி உருவம் நின்ற நிலையில் உள்ளது. பிற்காலச் சோழ வேந்தர், பலவிதமான நாணயங்களை, தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் வெளியிட்டனர். இவர்கள் காலத்திய காசுகள் பற்றிக் கல்வெட்டுகளில் பல குறிப்புகள் உள்ளன. கல்வெட்டுக்களில் ‘மதுராந்தகன் மாடை’, ‘இராஜராஜன் மாடை’, ‘இராஜேந்திரன் மாடை’ முதலான காசுகளைப் பற்றியும் கழஞ்சு, பொன் பற்றியும் நிறைய குறிப்புகள் காணப்படுகின்றன. மாடை என்பது இரண்டு காசுகளுக்குச் சமமானது. இராசராசனது காசுகளை நாம் இருவகையாகப் பிரிக்கலாம். முன்பக்கமும், பின்பக்கமும் புலி, இரட்டை மீன், வில் ஆகிய மூன்று சின்னங்களும் பொறிக்கப்பட்டு ‘ஸ்ரீ ராஜ ராஜ சோழ’ என் நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பவை முதல் வகையினவாகும். இராசேந்திரசோழன் விருதுகளின் பெயரில் நாணயங்களை வெளியிட்டுள்ளான். இரு பக்கங்களிலும் புலி, இணைக்கயல், வில் ஆகிய மூன்று உருவங்கள் வரிசையாக பொறிக்கப்பட்டு, அவற்றின் கீழ் ‘கங்கை கொண்ட சோழன்’ என்று நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளது. இராசாதிராசன் வெளியிட்ட நாணயங்கள் மலை நாடு கொண்டான் எனத் தமிழில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள காசுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

**விஜயநகரர் கால நாணயங்கள்**

விஜய நகரர் காலத்தில் வெளியிட்ட நாணயங்களில் பெரும்பாலும் வெங்கடேஸ்வரரின் திருவுருவத்தையே பொறித்தனர். வட்டார நாணயங்களில் விஷ்ணுவின் அவதாரத் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. விசய நகரத்தாரின் ஆட்சிக்காலத்தில் ‘ராமடங்கா’ எனப்பட்ட தங்க நாணயங்கள் அதிக அளிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பக்கத்தில் இராமரும் சீதையும் மறுபக்கத்தில் அனுமன் உருவமும் காணப்படுகின்றன. விசய நகரப் பேரரசர்களின் சிற்றரசர்களான மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கர்களும் பலவிதமான காசுகளை வெளியிட்டனர். ,வர்களது காசுகளில் நாகரி, தெலுங்கு எழுத்துக்களே

பெரும்பாலும் காணப்படுகின்றன. மதுரை நாயக்க வேந்தனான விசுவநாத நாயக்கரின் காசில் 'விஸ்வநாதன்' என்றும், மீனாட்சி அரசியின் (கி.பி. 1732 - 36) காசில் 'மீனாட்சி' என்றும் தமிழில் பொறித்திருப்பது ஒரு புதுமையாகும். ,தனைப் போன்று தஞ்சை நாயக்க வேந்தனான விசய ரசுநாதனின் நாணயம் ஒன்றிலும், விசய ரசுநாதன் என்றே மன்னனின் பெயர் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காசின் முன்புறம் திருமகள் (லட்சுமி) திருவுருவம் இடம் பெற்றுள்ளது. முத்து கிருஷ்ணப்ப நாயக்கரின் (கி.பி. 1601-1609) செப்புக் காசொன்றின் முன்புறம் 'முத்து கிருஷ்ண' என்று தெலுங்கிலும், பின்புறம் 'வராஹ' என்று நாகரியிலும் அடுத்து சங்கு, சக்கரம் சின்னங்களும் காணப்படுகின்றன. செஞ்சி நாயக்க மன்னன் வெங்கடப்ப நாயக்கனின் காசு ஒன்று திருவண்ணாமலையில் கிடைத்துள்ளது. அதன் ஒருபுறம் விஷ்ணு அமர்ந்துள்ளார். இடப்புறம் அனுமன் அமர்ந்த நிலையில் விஷ்ணுவை பயபத்தியுடன் வணங்குவது போல் காட்டப்பட்டுள்ளது. மறுபுறத்தில் 'வெங்கடப" எனும் பெயர் தெலுங்கு நாகரி, தமிழ் என்று மூன்று மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

**முடிவுரை**

ஒரு நாட்டின் வளர்ச்சி பொருளாதாரம் ஆகியவற்றின் முக்கிய பங்கு வகிப்பவை நாணயங்களாகும். சங்க காலம் பாண்டியர்காலம், அசோகர் காலம், சேரர்கள், சோழர்கள், விஜய நகரத்தார் என எல்லாருடைய ஆட்சி காலத்திலும் தங்கம், வெள்ளி, செம்பு, போன்ற உலோகங்களில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாணயங்கள் பட்டத்தின் பெயர்களில் வெளியிட்டனர். ஹரப்பா, மெகஞ்சதாரோ, ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு, போன்ற அகழ்வு ஆய்வில் கிடைத்த நாணயங்களைக் கொண்டு அக்கால ஆட்சியாளர்கள், வரலாறு பண்பாடு ஆகியவை யூகிக்கப்படுகின்றன.